சுருக்கம்

தொடக்கக்கல்வி – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட யானையடி தொடக்கப் பள்ளியை "பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி" என பெயர் மாற்றம் செய்து நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>பள்ளிக் கல்வி (தொக3(2))துறை</u>

அரசாணை (நிலை) எண்.73

நாள் 17.04.2018.
திருவள்ளுவர் ஆண்டு–2049
சித்திரை–04
படிக்கப்பட்டவை:–

1) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 29.11.2017.
2) தொடக்கக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.28130/K4/2017, நாள் 23.11.2017 மற்றும் 08.02.2018.

–*–*–

<u>ஆணை:–</u>

தஞ்சாவூர் மாவட்டத்தில் 29.11.2017 அன்று தமிழ்நாடு அரசு சார்பில் நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக்கல்வித் துறை தொடர்பாக கீழ்க்காணும் சிறப்பு அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

<u>பள்ளியைத் தரம் உயர்த்துதல்</u>

"கும்பகோணம் நகரத்தில் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். படித்த யானையடி நகராட்சி தொடக்கப் பள்ளியானது நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும். மேலும், அப்பள்ளிக்கு பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி என்றும் பெயர் சூட்டப்படும்".

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட யானையடி நகராட்சி துவக்கப் பள்ளியானது 1910–ம் ஆண்டு முதல் கும்பகோணம் நகராட்சி நிர்வாகத்தால் துவங்கப்பட்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது எனவும், இப்பள்ளிக்கென நகராட்சி நிர்வாகத்தால் ஒதுக்கப்பட்ட நிலத்தில் 5 வகுப்பறை, 1 தலைமையாசிரியர் கொண்ட புதிய கான்கீரிட் கட்டடத்துடன் ஆண், பெண் ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுக்கென தனித்தனி கழிப்பறை வசதி, குடிநீர் வசதியுடன், மாணவர்களுக்கான 320 சதுர அடியுடன் கூடிய விளையாட்டுத்திடல், மின்சார வசதி மற்றும் பள்ளி வளாகத்தை சுற்றியும் சுற்றுச்சுவருடன், முழு வசதியுடன் கூடிய பள்ளியாக கும்பகோணம் நகரின் மத்திய பகுதியில் அமைந்துள்ளது எனவும் இப்பள்ளியில் தற்போதைய நிலையில் (ஆண் 12 + பெண் 13) 25 மாணவர்கள் பயின்று வருகின்றனர் என்றும், மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஒரு தலைமையாசிரியர், ஒரு இடைநிலையாசிரியர் என 2 ஆசிரியர் பணியிடங்கள் ஒதுக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், இப்பள்ளியில் "மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் புரட்சி தலைவர் எம்.ஜி. இராமச்சந்திரன் "அவர்கள் வரிசை எண்.1101, சேர்க்கை எண்.100–ல் 1922–ஆம் ஆண்டில் இப்பள்ளியில் சேர்க்கப்பட்டது முதல் மூன்றாண்டுகள் கல்வி பயின்றுள்ளதாகவும்,

அவரது சகோதரர் திரு ஜி. சக்கரபாணி, வரிசை எண்.1104, சேர்க்கை எண்.104–ல் சேர்க்கப்பட்டு பயின்று வந்ததாகவும் பள்ளி சேர்க்கை / நீக்கல் பதிவேட்டின்படி அறியப்படுகிறது என்றும், தஞ்சாவூர் மாவட்டத்தில் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட உள்ள நிலையில் இப்பள்ளிக்கு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவுப்பள்ளி என பெயர் மாற்றம் செய்யவும், இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்தக் கோரியும் பள்ளி மேலாண்மை குழுவால் 13.10.2017 மற்றும் 22.11.2017 ஆகிய தேதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது எனவும், நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்படும் பட்சத்தில் 6 முதல் 8 வரையான வகுப்புகளில் கூடுதலாக சுமார் 21 மாணவர்கள் பள்ளியில் சேர்வதற்கான வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்து, இப்பள்ளியை "பாரத ரத்னா புரட்சி தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப் பள்ளி" என பெயர் மாற்றம் செய்து நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்த தொடக்கக் கல்வி இயக்குநர் அரசாணை கோரியுள்ளார்.

3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பு அறிவிப்பின்படி தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு ஏற்று கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

- **தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் ஒன்றியம், கும்பகோணம் நகராட்சிக்குட்பட்ட யானையடி நகராட்சி தொடக்கப் பள்ளியை பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவுப்பள்ளி என பெயர் மாற்றம் செய்து நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அனுமதி வழங்கப்படுகிறது.**

- **தரம் உயர்த்துவதால் இப்பள்ளியின் தலைமையாசிரியர் பணியிடம் மூன்றாம் ஆண்டில் தரம் உயர்த்த அனுமதி வழங்கப்படுகிறது.**

- **ஆண்டுக்கு ஒரு பட்டதாரி ஆசிரியர் வீதம் 3 ஆண்டுகளுக்கு 3 பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில் ஆசிரியர் பணியிடங்களை விதிகளை பின்பற்றி பணிநிரவல் மூலம் நிரப்பி கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.**

4. இவ்வரசாணை நிதிதுறையின் அ.சா.எண்.11313/கல்விII/2018, நாள் 03.04.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநிலத் திட்ட இயக்குநர், அனைவருக்கும் கல்வி இயக்ககம், சென்னை–6.
திட்ட இயக்குநர், அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர்.
மாவட்ட கருவூல அலுவலர், தஞ்சாவூர்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர், தஞ்சாவூர் மாவட்டம்.
நகல்
சிறப்புத் திட்ட அமலாக்கத் துறை, சென்னை–9.
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9,
நிதித் (கல்வி II/ வரவு செலவு (பொது – I & II) (CMPC) துறை,சென்னை–9.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அலுவலகம்,
சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை தனிச்செயலாளர்,
பள்ளிக் கல்வித்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு–செலவு (அநமு) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
17/04/18